செ.வெ.எண்.52 நாள்:22.08.2017

## செய்தி வெளியீடு

**நீலகிரி மாவட்டம் உதகை மோனார்க் இண்டர்நேஷனல் கல்லூரியில் இன்று (22.08.2017) தமிழக முன்னாள் முதலமைச்சர் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு சத்துணவு சமையலர்களுக்கிடையேயான சமையல் போட்டி மாவட்ட ஆட்சியர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

நீலகிரி மாவட்டம் உதகை மோனார்க் இண்டர்நேஷனல் கல்லூரியில் இன்று தமிழக முன்னாள் முதலமைச்சர் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு சத்துணவு சமையலர்களுக்கிடையேயான சமையல் போட்டியில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையேற்று கூறியதாவது,

தமிழக முன்னாள் முதலமைச்சர் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா 11.09.2017 அன்று கொண்டாடப்படுவதையொட்டி மாவட்டத்தில் பல்வேறு துறைகளின் மூலம் பல்வேறு போட்டிகள் நடைபெற்று வருகிறது. அதன் ஒரு பகுதியாக 05.08.2017 அன்று உதகமண்டலம், குன்னூர், கோத்தகிரி, கூடலூர் ஆகிய 4 ஊராட்சிகளில் பணிபுரியும் சத்துணவு சமையலர்களுக்கிடையேயான சமையல் போட்டி நடைபெற்றது. நான்கு ஊராட்சிகளில் தேர்தெடுக்கப்பட்ட 12 சமையலர்களுக்கிடையே இன்று மாவட்ட அளவில் சமையல் போட்டி நடத்தப்பட்டது. இதில் முதலிடம் திருமதி.ஜென்சி அரசு உயர்நிலைப்பள்ளி கட்டபெட்டு, இரண்டாம் இடம் திருமதி.வித்யா தூய இருதய ஆண்டவர் உயர்நிலைப்பள்ளி உதகை, மூன்றாம் இடம் திருமதி.தனலட்சுமி உதவிபெறும் துவக்கப்பள்ளி எரின்காடு குன்னூர், மூன்றாம் இடம் திருமதி.ஆமீனா அரசு உயர்நிலைப்பள்ளி தேவர்சோலா ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர். முதல் மூன்று இடங்களை பிடித்த சமையலர்களுக்கு நீலகிரியில் நடத்தப்படும் தமிழக முன்னாள் முதலமைச்சர் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவில் தமிழக முதலமைச்சர் அவர்களால் பரிசுகள் வழங்கப்படும் என மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(சத்துணவு) திரு.ராஜூ, உதகை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.ரமேஷ்கிருஷ்ணன் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.